Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

CC No.274/2023

| | | |
|---|---|---|
| | | Prosecution PW 1 |
| Deposition of Witness for | | Defence |
| | | Court |
| Name | : | சுவிதா |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 20.10.2023

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

1) நான் ராமானுார், பசுபதிபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் M.Com., C.A., M.phil., படித்துள்ளேன். தற்போது வீட்டில் இருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். நீதிமன்றத்தில் இருந்து Xerox Operator, இளநிலை நிர்வாக உதவியாளர் பணி குறித்த விளம்பரத்தை பார்த்துவிட்டு கரூர் நீதிமன்ற வளாகத்திற்குள் வந்தபோது, ஆஜர்எதிரி எங்கள் ஊரில் குடியிருந்து வந்த வகையில் ஆஜர் எதிரி என்னை

s/d. K.Ambiga

நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்

பார்த்து நீதிமன்றத்திற்கு எதற்காக வந்துள்ளீர் என்று கேட்டார். அதற்கு நான் அவரிடம் மேற்கண்ட பணிகளுக்கு விண்ணப்பிப்பதற்காக வந்திருப்பதாக கூறினேன். அதற்கு ஆஜர் எதிரி நீதிமன்றத்தில் பணிபுரிந்து வருவதாகவும், இந்த வேலையை படித்தால் வாங்க முடியாது என்றும், எனக்கு நீதிபதிகளைத் தெரியும் என்றும் மற்றும் நிறைய நபர்கள் தொடர்பில் இருப்பதாகவும் அவர்களிடம் பேசி பணம் கொடுத்து வேலை வாங்கி தருவதாக சொன்னார். நான் வீட்டில் கலந்து ஆலோசித்துவிட்டு கூறுவதாக சொன்னேன். 18.11.2017 ஆம் தேதியில் ரூ.7,00,000/- கொடுத்தோம். அந்த தேதிக்கு ஒரு மாதத்திற்கு முன்பாக ஆஜர் எதிரி வீட்டிற்கு வந்து வேலை வாங்க பணம் கொடுக்க என்ன சொல்கிறீர்கள் என்று கேட்டார்.

2) நான் எனது கணவரிடம் கேட்டேன். அதற்கு என் கணவர் முதலில் வேண்டாம் என்று கூறிவிட்டார். அதனால் நான் எனது அப்பாவிடம் மேற்படி விவரத்தை கூறினேன். என் அப்பாவும் முதலில் வேண்டாம் என கூறினார். பின் என் வற்புறுத்தலால் என் அப்பா என் நகைகளை அடகு வைத்தும், பைனான்ஸ் மூலம் கடன் வாங்கி தருவதாகவும் சொன்னார். ஆனால் அதற்கு முன் வேலை வாங்கித் தருவதாக சொன்ன நபரை பற்றி என்னிடம் விசாரித்தார். ஆஜர் எதிரியைப் பற்றி ஆஜர் எதிரி குடியிருந்த வீட்டிற்கு எதிரே இருந்த நபரிடம் விசாரித்து தெரிந்து கொண்டார். அந்த நபர் பெயர் ராஜா ஆகும். அவர் தற்போது உயிருடன் இல்லை. ராஜாவுடன் 18.11.2017 ம் தேதி ஆஜர் எதிரி வீட்டிற்கு நான், எனது அப்பா, இறந்துபோன ராஜாவுடன் சென்றோம். பின்னர் ராஜா ஆஜர் எதிரியிடம் வேலை பற்றி விசாரித்தபோது, ஆஜர் எதிரி 15 நாட்களில் வேலை வாங்கி கொடுத்துவிடுவதாகவும், நீதிபதியிடம் பேசிவிட்டதாகவும், பணம் கொண்டு வந்துள்ளீர்களா என்றும் கேட்டார்.

3) அப்போது ஆஜர் எதிரியிடம் ராஜாவும், எனது அப்பாவும் பணம் ரூ.7,00,000/- ஐ கொடுத்தோம். அப்போது நாங்கள் பணம் கொடுக்கும்போது ஆஜர் எதிரியுடன் இன்னொரு நபர் இருந்தார். நாங்கள் அவர் யார் என்று கேட்டபோது அவரும் நீதிமன்றத்தில் என்னுடன் வேலை செய்வதாக எதிரி சொன்னார். ஆஜர் எதிரி பணத்தை எண்ணி ஒரு மஞ்சப்பைக்குள் போட்டு பணத்தை அவருடைய பீரோவில் வைத்தார். அச்சமயத்தில் ஆஜர் எதிரிக்கே தெரியாமல் அவர் பணம் எண்ணுவதை எனது தந்தையின் செல்போனில் இருந்து படம் பிடித்துக் கொண்டோம். எதிரி 15 நாட்களில் வேலை வந்துவிடும், நீங்கள் செல்லுங்கள் என்று கூறினார். பின்னர் நாங்கள் காத்திருந்து

s/d. K.Ambiga

நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்

பார்த்துவிட்டு எதிரி எங்களை வேலை வாங்கி தரவில்லை. பின்பு எதிரி ஏமாற்றிவிட்டார் என தெரிந்து கொண்டேன்.

4) பின்னர் எங்களுக்கு தெரிந்த வழக்கறிஞரிடம் கேட்டபோது எதிரி இதேபோல் வேலை வாங்கி தருவதாக சொல்லி பல நபர்களிடம் பணம் வாங்கி ஏமாற்றிவிட்டதாக சொன்னார். அந்த சமயத்தில் JUDGE ஐயா ஒருவர் வந்திருப்பதாகவும், அவரிடம் புகார் கொடுங்கள் என்று கூறியதன் பேரில் Judge ஐயா வந்த பயனியர் மாளிகைக்கு சென்று நடந்த விவரத்தை கூறினேன். அவர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர், உயர்நீதிமன்றத்திற்கும் புகார் கொடுக்கும்படி சொன்னார்கள். நாங்கள் மறுநாள் சென்று புகார் கொடுத்தோம். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்து விசாரணைக்காக அழைத்து விசாரித்தனர். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது. நான் கையெழுத்து செய்த அந்த புகார் மனு அ.சா.ஆ-1 ஆகும். எதிரி வேலையும் வாங்கி தரவில்லை மற்றும் பணத்தையும் திருப்பி தரவில்லை. எங்களை ஏமாற்றிவிட்டார். மேலும் எதிரி பல நபர்களை எனக்கு தெரியும் என்றும் இனிமேல் பணம் கேட்டு வந்தீங்கனா என் கணவரின் வேலையையும் காலி செய்துவிடுவேன் என்று மிரட்டினார். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

s/d. K.Ambiga
நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்

Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

CC No.274/2023

| | |
|---|---|
| | Prosecution PW 2 |
| Deposition of Witness for | Defence |
| | Court |
| Name : | சண்முகம் |
| Father's Name : | |
| Village : | |
| Taluk : | |
| District : | |
| Caste : | |
| Calling : | |
| Religion : | |
| Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 20.10.2023

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

1) நான் கணபதிபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் அரசு ஊழியராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். அ.சா.1 சுவீதா என் மகள் ஆவார். ஆஜர் எதிரி முத்தையனை எனக்கு தெரியும். ஆஜர் எதிரி எனது மகளிடம் நீதிமன்றத்தில் வேலை வாங்கித் தருவதாகவும், அதற்காக ரூ.7,00,000/- கேட்டதாகவும் என் மகள் என்னிடம் கூறினார். 2017 ம் வருடம் தேதி மாதம் ஞாபகமில்லை ஒருநாள் ஆஜர் எதிரி வீட்டிற்கு

s/d. K.Ambiga

நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்

பணம் ரூ.7,00,000/- கொடுப்பதற்காக சென்றோம். அப்போது நான் என்னுடன் என் மகள் அ.சா.1 சுவீதா, எனது நண்பர் ராஜா ஆகியோர்கள் ஆஜர் எதிரியின் வீட்டிற்கு சென்றிருந்தோம். அங்கு ஆஜர் எதிரியுடன் மற்றொரு நபர் இருந்தார். ஆஜர் எதிரியும் அங்கிருந்து இன்னொரு நபரும் அவர்களுக்கு தெரிந்த நீதிபதிகள் இருப்பதாகவும் உறுதியாக வேலை வாங்கித் தருவதாகவும் கூறினார்கள். ரூ.7,00,000/- பணத்தை நாங்கள் எதிரியிடம் கொடுத்தோம். அவர் வேலை வாங்கித் தரவில்லை. இது சம்மந்தமாக என் மகள் அ.சா.1 புகார் கொடுத்தார். புகார் சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

2) ஆஜர் எதிரி மற்றும் ஆஜரில்லாத எதிரியிடம் நாங்கள் பணத்தை கொடுக்கும்போது என்னுடைய 9962116249 என்ற நம்பர் கொண்ட Lenova செல்போன் மூலம் அவர் பணத்தை எண்ணும்போது நான் புகைப்படம் எடுத்தேன். புகைப்படம் உள்ள செல்போனை நான் போலீசாரிடம் சாட்சிக்காக ஒப்படைத்தேன். என்னிடம் காட்டப்படும் அத்தாச்சியில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த அத்தாச்சி அ.சா.ஆ.2 ஆகும். என்னிடம் காட்டப்படும் போட்டோவை நான்தான் எடுத்தேன். (சாட்சியிடம் எதிரி பணம் என்னுவதைப்போல் உள்ள போட்டோவை சாட்சியிடம் காட்டப்பட்டு இந்த கேள்வி கேட்கப்பட்டது) போட்டோ எடுத்ததற்கான Lenova செல்போனை போலீசாரிடம் ஒப்படைத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் Lenova செல்போன் என்னுடையது. அந்த Lenova செல்போன் அ.சா.பொ.1 ஆகும். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

s/d. K.Ambiga
நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்

Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

CC No.274/2023

| | | |
|---|---|---|
| | | Prosecution PW 3 |
| Deposition of Witness for | | Defence |
| | | Court |
| Name | : | மோகன்ராஜ் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 20.10.2023

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

1) நான் ராமாக்கவுண்டனூரில் குடியிருந்து வருகிறேன். நான் பத்திரப் பதிவுத்துறையில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மனைவி ஆவார். அ.சா.2 சண்முகம் எனது மாமனார் ஆவார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கரூர், சட்டப்பணிகள் ஆணைக்குழு மூலம் இளநிலை நிர்வாக உதவியாளர், xerox Operator, முதுநிலை கட்டளை பணியாளர் ஆகிய பணிகளுக்கு ஆள் எடுப்பதாக செய்தித்தாளில்

s/d. K.Ambiga

நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்

பிரசூரிக்கப்பட்டது. அதைப் பார்த்து என் மனைவி அந்த பணிக்கு விண்ணப்பித்திருந்தார். அந்த வேலையின் தன்மை குறித்து விசாரிப்பதற்காக கரூர் மாவட்ட நீதிமன்றத்திற்கு சென்றதாகவும், அப்போது ஆஜர் எதிரி முத்தையனை பார்த்ததாகவும், அவர் பக்கத்து வீட்டில் வசித்து வந்த வகையில் அவர் எனது மனைவி அ.சா.1 இடம் நீதிபதியை தனக்கு தெரியும் என்றும் நீதிமன்றத்தில் வேலை வாங்கித் தருவதாகவும் என்னிடம் கூறினார்.

2) சுமார் 6 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் ஆஜர் எதிரி வீட்டிற்கு வந்து தேர்வை எழுதுங்கள் மற்றும் பணம் ரூ.7,00,000/- கொடுத்தால் வேலை வாங்கி விடலாம் என்றும், xerox Operator பணி தற்காலிகமானது என்றும், இளநிலை நிர்வாக உதவியாளர், முதுநிலை கட்டளை பணியாளர் ஆகிய பணிகள் நிரந்தரப் பணிகள் என்றும் கூறினார். நான் என் மனைவியிடம் பணம் கொடுத்து வேலைக்கு செல்ல வேண்டாம் என்று கூறிவிட்டேன். ஆனால் எதிரி குறிப்பிட்ட நீதிபதி பெயரை குறிப்பிட்டு தெரியும் எனக் கூறினார். எனது மனைவி பிடிவாதமாக அவர் அப்பா அ.சா.2 டம் கூறி பணம் ரூ.7,00,000/-ஐ தயார் செய்து 18.11.2017 அல்லது 18.11.2018 ஆ என்று எனக்கு சரியாக வருடம் ஞாபகமில்லை. அன்று எனது மனைவி அ.சா.1 , அ.சா.2 மற்றும் ராஜா ஆகியோர்கள் ஆஜர் எதிரியின் வீட்டிற்கு சென்று பணம் ரூ.7,00,000/-ஐ கொடுத்துவிட்டதாகவும் 15 நாட்களில் வேலை வந்துவிடும் என்று எதிரி கூறியதாகவும் கூறினார்கள். எனது மனைவி அந்த தேர்வை எழுதினார். OMR Sheet மற்றும் Question paper ஐயும் வாங்கி கொண்டதாக கூறினார். பின்னர் அந்த பணிக்கான அறிவிப்பானது மோசடி என தெரிந்ததால் ரத்து செய்யப்பட்டது. பின்னர் சுமார் 6 மாதம் காத்திருந்து பின்னர் ஆஜர் எதிரியிடம் பணத்தை திருப்பி கேட்டோம். ஆஜர் எதிரி பணத்தை திருப்பி தரவில்லை.

3) அப்போது வழக்கறிஞரிடம் இது குறித்து விசாரித்தபோது அவர் நீதிமன்றங்களில் வேலை வாங்கி தருவதாக மோசடி புகார்கள் வந்துள்ளதாகவும், நீங்கள் நீதிமன்றத்திற்கு சென்று புகார் செய்யுங்கள் என்று கூறியதன் பேரில் முத்தையன் பணம் வாங்கியபோது என் மாமனார் என் மாமனாரின் போனில் எடுத்த போட்டோவுடன் சென்னையில் இருந்து வந்திருந்த நீதிபதியிடம் புகார் கொடுத்தோம். மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தோம். அதன் பிறகு மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் அ.சா.1 கொடுத்த புகாரின் பேரில் போலீசார் என்னை விசாரித்தனர்.

s/d. K.Ambiga

நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்

**குறுக்கு விசாரணை**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

s/d. K.Ambiga

நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்